## குளிப்பு

இங்கே குளிப்பு என்பது ஒருவர் பெரும் அசுத்தத்திலிருந்து தூய்மையடைவதற்காகக் கட்டாயமான, ஒரு சிறு பகுதியும்கூட நனைக்கப்படாமல் விடுபடாதிருக்கும் வகையிலான முழு உடல்மீதும் நீராடிக் குளிப்பதாகும். இவ்வகையான குளிப்பு கீழ்க்காணும் நிலைகளில் கட்டாயமானதாகும்.

1 **உடலுறவு அல்லது கெட்ட கனவில் இந்திரியம் வெளிப்படுதல்**

2 **மாதவிடாய் நின்றுவிட்டபின்**

3 **பிள்ளைப்பேறுகால இரத்தப்போக்கு நின்றுவிட்டபின்**

4 **எவரும் இறந்துவிட்டால் மக்கள் அவரைக் குளிப்பாட்டுவது கடமையாகும்**

5 **ஒரு இறைமறுப்பாளர் ஈமான் கொண்டபின்.** ஹஜ்ரத் ஃகய்ஸ் பின் ஹாகிம் (ர) அவர்கள் ஈமான் கொண்டுவந்தபோது அவரை இறைத்தூதர் ﷺ அவர்கள் தண்ணீர் மற்றும் பேரி மர இலைகளைக்கொண்டு குளிக்குமாறு கட்டளையிட்டார்கள் (நசாயி).

### குளிப்பின் அடிப்படை அர்க்கான்கள்

குளிப்பின் இரண்டு அடிப்படை அம்சங்கள் உள்ளன, அவற்றில் ஒன்றுகூட விடுபட்டாலும் குளிப்பது முறையானதாகாது.

1 **நிய்யத்** அதற்கான நிய்யத் செய்துகொள்ளாமல் தண்ணீரை ஊற்றிக் கொண்டால் அது குளிப்பதாகக் கருதப்படாது, அவன் அசுத்தமானவனாகவே இருப்பான்.

2 **முழு உடல் மீதும் தண்ணீரை ஊற்றுதல். முடிந்த அளவிற்கு இரு கைகளாலும் உடம்பைத் தேய்த்துக் குளித்தல்**

### குளிப்பின் சுன்னத்துகள்

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய குளிக்கும் முறையைப்பற்றி ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், அவர்கள் ﷺ கட்டாயமான குளிப்பினை மேற்கொள்ளும்போது முதலில் இரு கைகளையும் கழுவிக்கொள்வார்கள், அதன்பின் வலது கையினால் இடது கையின்மீது தண்ணீரை ஊற்றுவார்கள், தன்னுடைய மர்மஸ்தானத்தைக் கழுவிக்கொள்வார்கள் அதன்பின் உது செய்துகொள்வார்கள். அதன்பின் கைகளில் தண்ணீரை எடுத்துத் தனது தலைமயிர்களின் வேர்களில் தண்ணீர் செலுத்திக் கழுவுவார்கள், அதன்பின் தலையின்மீது மூன்று தடவை தண்ணீரை ஊற்றுவார்

www.uzairfalahi.com

கள், அதன்பின் முழு உடல்மீதும் தண்ணிரை ஊற்றிக் குளிப்பார்கள், இறுதியில் கால்களைக் கழுவிக்கொள்வார்கள் (புக்ஹாரி, முஸ்லிம்) இவ்வகையில், குளிப்புக்கான சுன்னத்துக்கள் கீழ்வருமாறு:

1 **இரண்டு கைகளையும் கைமுட்டுக்கள் வரையில் கழுவுதல்**

2 **மர்மஸ்தானத்தைக் கழுவுதல்**

3 **தொழுகைக்காக செய்வதுபோல் உழூ செய்துகொள்ளுதல், இறுதியில் கால்களைக் கழுவுதல்** இருப்பினும், தண்ணீர் தேங்காமலிருக்கும் ஒரு இடத்தில் குளித்தால் கால்களை கடைசியில் கழுவத்தேவையில்லை, முதலிலும் கழுவிக்கொள்ளலாம்.

4 **தலையை மூன்று தடவை தண்ணீர் முடியின் வேர்கள்வரை செல்லும் வகையில் கழுவுவது**

5 **முழு உடல் மீதும் வலது மற்றும் இடது புறங்களிலும் தண்ணீர் ஊற்றிக் குளிப்பது** ஏனெனில், இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒவ்வொன்றிலும் வலது புறமாகச் செய்யத்துவங்குவதை விரும்புவார்கள்.

6 **பொதுவாகவே, தண்ணீர் சென்றடையாத அந்த உடலுறுப்புக்களைக் கழுவுவதில் கவனம் செலுத்தவேண்டும், குறிப்பாகக் காதுகளின் உட்புறம், தொப்புள் மற்றும் கால் விரல்களுக்கிடையிலான பகுதிகள் மற்றும் கைவிரல்களுக்கிடையிலான பகுதி ஆகியவற்றைக் கவனமாகக் கழுவவேண்டும்.** பெண்கள் குளிக்கும்போது அவர்கள் சடை பின்னியிருந்தால், அதனை அவிழ்த்து விடத்தேவையில்லை. ஆனால், தலைமுடியின் வேர்கள்வரை தண்ணீர் சென்றடையும் வகையில் பார்த்துக்கொள்ளவேண்டும், சற்றும் தண்ணீர் செல்லாது காய்ந்திருக்கக்கூடாது.

www.uzaifdahi.com

**ஒருவர் எங்கெல்லாம் செல்லவோ, கலந்துகொள்ளவேணடிய நிலையில் குளித்துவிட்டுச் செல்லவேண்டிய இடங்கள் கீழ்வருமாறு:**

1 **ஜும்ஆவிற்காக குளித்தல்**

2 **இரண்டு பெருநாட்களில் குளித்தல்**

3 **மக்காஹ் முகர்ரமஹ்வில் பிரவேசிப்பதற்குமுன் குளித்தல்**

4 **மதீனஹ் முனவ்வரஹ்வில் பிரவேசிப்பதற்குமுன் குளித்தல்**

5 **இஹ்ராம் அணிவதற்குமுன் குளித்தல்**

6 **அரஃபஹ்வில் உஃகூஃப் செய்வதற்காகக் குளித்தல்**

7 **எந்த ஒரு பேரிடர் அல்லது அச்சம் ஏற்படும்போதும் அல்லாஹ்விடம் துஆ கேட்க முற்படும்போது குளித்தல்**

8 முடி வெட்டிக்கொண்டபின் குளித்தல்

9 லைலதுல் ஃகத்ரு இரவில் குளித்தல்

10 பைத்தியம், மயக்கம் அல்லது உணர்விழந்து மீண்டும் நினைவு திரும்பியபின் குளித்தல்

11 மய்யித்தைக் குளிப்பாட்டிய பிறகு குளித்தல்

12 பாவச்செயல்களைப் புரிந்தவர்கள் தன்னுடைய பாவங்களிலிருந்து பாவ மன்னிப்புக்கோரியபின் குளித்தல்

13 பிரயாணத்திலிருந்து திரும்பிவந்தபின் குளித்தல்

14 மார்க்க அமர்வுகளில் கலந்துகொள்வதற்காகச் செல்வதற்குமுன் குளித்தல்

15 பெண்கள் மாதவிடாய் இரத்தப்போக்கு முடிந்துவிட்டபின் குளித்தல்

**ஜனாபத் நிலையில் கீழ்க்காணும் விஷயங்கள் தடுக்கப்பட்டுள்ளன**

1 தொழுகை நிறைவேற்றுதல்

2 கஅபாவைச்சுற்றி தவாஃப் செய்தல்

3 திருக்ஃகுர்ஆனைத் தொடுதல், கையிலெடுத்தல் அல்லது ஓதுதல்

4 பள்ளிவாசலுக்குள் செல்லுதல் (தவிர்க்கமுடியாத கடுமையான தேவையைத் தவிர)

* * *

www.uzairfalahi.com